பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**06 12 2025** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

*தலைப்புச் செய்திகள்*

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இளைஞர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

2. ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினின் வருகையால் இந்திய அமெரிக்க நட்புறவு எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. தீவிரவாதத்தை ஒழிப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளை வலுப்படுத்த இந்தியாவும் — அமெரிக்காவும் முடிவு செய்துள்ளன.

4. இண்டிகோ ஏர்லைன்ஸ் ரத்து செய்யப்பட்ட விமான சேவைக்கான கட்டணத்தை பயணிகளுக்கு உடனடியாக திருப்பி செலுத்த வேண்டும் என்று சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

5. குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மிதுன் மஞ்சுநாத் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் இலக்கை எட்டும் முயற்சிக்கு இளைஞர்கள் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு தர வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

குஜராத் மாநிலம் ஏக்தா நகரில் ஒற்றுமை சிலை அருகே நடைபெற்ற சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-ஆவது ஆண்டு நிறைவு விழா கூட்டத்தில் உரையாற்றிய குடியரசு துணைத்தலைவர், நாட்டின் வளர்ச்சியின் உந்து சக்தியாக இளைஞர்கள் உள்ளனர் என்று குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள இளைஞர்களின் வலிமை, வளர்ச்யின் பெரும் சக்தியாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

தேச ஒற்றுமை மற்றும் நாட்டின் கட்டமைப்புப்பணிகளில் சர்தார் பட்டேலின் பங்களிப்பு போற்றத்தக்கது என்று கூறிய அவர், அவர் கற்றுத்தந்த விஷயங்களை இளைஞர்கள் கடைபிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் குஜராத் ஆளுநர் திரு ஆச்சாரியா தேவ்ரத், முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல், மத்திய அமைச்சர்கள் டாக்டர் மன்சுக் மாண்டவியா, திரு ராஜீவ் ரஞ்சன் ராய் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>>

ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினின் இந்திய வருகையால் அமெரிக்கா உடனான நட்புறவு எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அமெரிக்கா உடனான தடையில்லா வர்த்தக ஒப்பந்த்தை இறுதி செய்வதில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாது என்றும் உறுதிபட தெரிவித்தார்.

உலக அரசியலில் எந்தவொரு நாட்டுடனும் பொருளாதார, வர்த்தக மற்றும் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள இந்தியாவுக்கு முழு உரிமை உள்ளது என்று அவர் கூறினார்.

இந்தியா ஒரு நாட்டுடன் கொண்டுள்ள நட்புறவு குறித்து மற்ற எந்த நாடும் பேசுவதற்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது என்று டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தீவிரவாத்தை ஒழிப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளை வலுப்படுத்த இந்தியாவும் — அமெரிக்காவும் முடிவு செய்துள்ளன

புதுதில்லியில் நடைபெற்ற பயங்கரவாத தடுப்பு குறித்த இந்திய — அமெரிக்க கூட்டு செயற்குழு கூட்டத்தில் தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிப்பது, இணையதள பாதுகாப்பு, தீவிரவாத தடுப்புக்கான

சிறந்த நடைமுறைகளை பகிர்ந்துகொள்வது, பயங்கரவாத செயல்கள் குறித்த தகவல்களை பகிர்ந்துகொள்வது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

ஏற்கனவே உள்ள மற்றும் புதிய அச்சுறுத்தல்கள் குறித்தும் தீவிரவாதிகள் தொழில்நுட்பத்தை முறைகேடாக பயன்படுத்துவதை தடுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

தீவிரவாத அமைப்புகளுக்கு நிதி அளிக்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் செயல்பாடுகளை முடக்குவது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.

ஐ எஸ் ஐ எஸ், அல் கொய்தா, லஷ்கர் இ தொய்பா, ஜெய் ஷே முகமது மற்றும் மறைமுக குழுக்கள் குறித்தும். இவற்றை ஆதரிப்பவர்கள் குறித்தும், திறம்பட புலனாய்வு செய்து அவர்களின் நடவடிக்கைகளை ஒடுக்குவது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

ஏ ஐ தொழில்நுட்பம், ட்ரோன்களை பயன்படுத்தி தீவிரவாத செயல்கள் மேற்கொள்ளப்படுவதை தடுப்பது குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வெளியுறவு அமைச்சகத்தின் இணைச்செயலர் டாக்டர் **Vinod Bahadev** தலைமையிலான குழுவினர் இந்தியா சார்பில் பங்கேற்றனர்.

அமெரிக்க குழுவிற்கு அந்நாட்டின் உள்துறை அமைச்சக அதிகாரி மோனிகா ஜேக்கப்சென் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>>

பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களின் அச்சகத்தை களையும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஒன்பதாவது பரிக்ஷா பே சர்ச்சா கலந்துரையாடலையொட்டி, இணையதளம் வாயிலான வினாடி-வினா போட்டியில் வரும் ஜனவரி மாதம் **11-**ஆம் வரை பங்கு பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு முதல், **12-**ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் இந்த போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.

**mygov.** இணையதளத்தில் பதிவு செய்து இப்போட்டிகளில் பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடியுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

உள்நாட்டில் மட்டுமின்றி, வெளிநாடுகளில் இருந்தும் ஆசியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் இதில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு நடத்தப்பட்ட பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்யில், **245** நாடுகளை சேர்ந்த மாணவர்கள், **153** நாடுகளை சேர்ந்த ஆசிரியர்கள், **149** நாடுகளை சேர்ந்த பெற்றோர் கலந்துகொண்டு கின்னஸ் சாதனை படைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனம் ரத்து செய்யப்பட்ட பயணச்சீட்டுகள் மற்றும் ரத்து செய்யப்பட்ட விமான பயணங்களுக்கான கட்டணத்தை நாளை இரவு எட்டு மணிக்குள் சம்பந்தப்பட்ட பயணிகளுக்கு திருப்பி செலுத்த வேண்டும் என்று சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

ரத்து செய்யப்பட்ட விமானங்களில் உள்ள பயணிகளின் உடமைகளை கண்டறிந்து **48** மணிநேரத்தில் உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பயணிகளுக்கு தெளிவான தகவல் தரப்பட்டு, குறித்த நேரத்தில் அவர்களின் பொருட்களை ஒப்படைக்க வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயண நேரம் மாற்றியமைக்கப்பட்ட விமான சேவைகளுக்கு கூடுதல் கட்டணம் விதிக்கக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த காலத்தில் ரத்தான பயணிகளுக்கான தொகையை திருப்பி செலுத்தவில்லை எனில் இண்டிகோ நிறுவனத்தின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் எச்சரித்துள்ளது.

<<<<<>>>>>>

இளைய தலைமுறையினர் அறிவியல் கற்பதை ஊக்குவிக்கும் வகையில், அறிவியல் விழாக்கள் நடத்தப்படுவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் பஞ்ச்குலாவில் 11-ஆவது இந்திய சர்வதேச அறிவியல் விழாவை தொடங்கிவைத்து பேசிய அமைச்சர், அறிவியல் சாதனைகளை மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்றும் கூறினார்.

இவ்விழாவில் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு சென்று திரும்பிய இந்திய விண்வெளி வீரர் குருப் கேப்டன் சுபான்ஷு சுக்லா கலந்துகொண்டு மாணவர்கள் மற்றும் இளம் விஞ்ஞானிகளுடன் தமது அனுபவங்களை பகிர்ந்துகொண்டார்.

இந்தியாவில் அறிவியல் துறை வேகமாக வளர்ச்சி பெற்று வருவதாக கூறிய சுபான்ஷு சுக்லா, இந்த துறையில் இந்தியா

சுயசார்பு கொண்டதாக நாடாக உருவெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தீவிரவாதம் எந்த வடிவில் இருந்தாலும், அதனை கண்டிப்பதாக இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா, அமெரிக்கா நாடுகளை கொண்டு குவாட் அமைப்பு உறுதிபட தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற குவாட் அமைப்பின் இரண்டு நாள் மாநாட்டில் இந்தோ — பசிபிக் மண்டலம் உட்பட தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இப்பகுதியில் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி, வெளிப்படையாகவும், தடையின்றியும் வர்த்தகம் நடைபெறுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

தீவிரவாதிகள் மற்றும் தீவிரவாத அமைப்புகள் குறித்த தகவல்களை உறுப்பு நாடுகள் பகிர்ந்துகொண்டு, ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் உறுதி செய்யப்பட்டது.

தீவிரவாதிகளுக்கு துணையாக செயல்படுபவர்கள் மற்றும் நிதியுதவி அளிக்கும் நபர்கள் மற்றும் நிறுவனங்களை கண்காணித்து, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குவாட் மாநாட்டில் உறுதி செய்யப்பட்டது.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் **9** மாநிலங்கள் மற்றும் **3** யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின்கீழ், இதுவரை **99** புள்ளி ஒன்பது மூன்று சதவீத கணக்கீட்டுப்படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதன்படி, **50** கோடியே **93** லட்சத்து **62** ஆயிரத்து **185** கணக்கீட்டு படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இவற்றில், **97** புள்ளி நான்கு ஒன்பது சதவீத கணக்கீட்டு படிவங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மிதுன் மஞ்சுநாத் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **22-20, 21-8** என்ற செட் கணக்கில், **Tushar Suveer**-ஐ வென்றார்.

இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் **Sanskar Saraswat**-ம் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

-------------------

குவாலியர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் திக் விஜய் பிரதாப் சிங், **Maan Kesharwani** ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

--------------------------

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான **3**வது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் **271** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை **22** புள்ளி ஒரு ஓவரில் விக்கெட் இழப்பின்றி **113** ரன் எடுத்துள்ளது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில், முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா **47** புள்ளி ஐந்து ஓவரில், **270** ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

**<<<<END>>>>>>**